1971 ஜூலை 16]

திருப்பூர் பகுதியில் தொழிற்பேட்டை

*267 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டம், திருப்பூர் நகர் அல்லது திருப்பூர் ஊராட்சி ஒன்றிய பகுதிக்குள் தொழிற்பேட்டை ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருப்பூர் பனியன் உற்பத்தியாளர்கள் திருப்பூரில் ஒரு கூட்டுறவுத் தொழிற்பேட்டை அமைப்பதற்கு தொழில் வணிக இயக்குநரிடம் கேட்டுள்ளார்கள். இதற்கான பூர்வாங்க விசாரணைகளை இயக்குநர் நடத்தி வருகிறார்.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, திருப்பூர் நகரில் ஏறத்தாழ 600 பனியன் பாக்டரிகள் இருக்கின்றன. மேலும் இப்போது அவை பலயிடங்களில் வாடகைக் கட்டடங்களில் இருந்து வருகின்றன. அந்த இடத்தில் ஒரு தொழில் பேட்டை ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம் அந்தத் தொழிலுக்கு சிராக பயன்படும். மேலும் பஞ்சாப் மாநிலத்திலிருந்து ஊசிகள், மெஷின்ஸ் போன்றவை தருவிக்கப்படுகின்றன. அவற்றை கூட்டுறவுத் தொழிற்பேட்டை மூலம் தமிழ்நாட்டில் தயாரித்தால் அந்தத் தொழிலுக்கு இன்னும் ஊக்கம் ஏற்படும். ஆகவே, அதை சிறு தொழில் வாரியத்தின் மூலம் செய்வதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவு தொழிற்பேட்டை அங்கு அமைப்பது நியாயம் என்று அரசு கருதுகிறது. விரைவில் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பனியன்கள் ஏற்றுமதி

*268 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் பனியன் (பின்னல்) தயார் செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் செயற்குறிப்பு ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. சு. துரைசாமி: கைத்தறித் துணிகளை நாம் வெளி நாடுகளுக்கு அனுப்புவதற்கு எடுத்துக்கொள்கிற முயற்சியைப்போன்று இந்தப் பனியன் தொழிலும் சிறந்தோங்க வெளிநாடுகளில் சந்தையைப் பிடிப்பதற்கு வேண்டிய முயற்சிகளை எடுப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதற்கென்று எக்ஸ்போர்ட் ப்ரமோஷன் கவுன்சில் இருக்கிறது. பனியன்களைப் பொறுத்தவரையிலும் வெளி மாநிலங்களுக்கு வாங்கி அனுப்புகிறார்கள். இங்குள்ளவர்கள் அதற்கான முயற்சிகளை எடுப்பார்களானால் அரசாங்கம் ஒத்துழைக்கும்.

திருப்பூர் திரு. ஏ. எம். மொய்தீன் : தலைவர் அவர்களே, பனியன் தொழில் என்பது இப்போது வளர்ச்சி அடைந்து வருகிற ஒரு தொழில். அதை மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வழிவகைகளை அரசு செய்யவேண்டும்

அந்தத் தொழிலை நடத்துகிறவர்கள் நூல் விலையேற்றம் வேறு சில காரணங்களினால் மிகவும் ஸ்தம்பித்திருக்கிறார்கள். அவர்களுடைய வருங்காலத்தை உத்தேசித்து அவர்களுக்கு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான காரியங்களை இந்த அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 12 கோடி ரூபாய் அளவிற்கு உற்பத்தியாகிறது நம் மாநிலத்தில். இதில் 75% வெளி மாநிலங்களில் விற்கப்படுகிறது. நம் மாநிலத்திலிருந்து ஏற்றுமதி செய்வதற்கு முயற்சி எடுத்தால் அரசாங்கம் ஒத்துழைப்பு தரலாம். நூலைப் பொறுத்தவரையில் அப்போதைக்கப்போது விலை ஏறுகிற சமயத்தில் அரசு தலையிட்டு குறைந்த விலையில் கிடைக்க ஏற்பாடு செய்யலாம்.

மாயூரத்தில் தொழிற்பேட்டை

* 269 வினா—**திரு. என். கிட்டப்பா:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம், மாயூரத்தில் ஒரு தொழிற்பேட்டை அமைக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தற்போது இல்லை.

வாலாஜாபேட்டையில் தொழிற்பேட்டை

* 270 வினா—**திரு. கே. ஏ. வகாப்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

வாலாஜா நகராட்சி எல்லையில் ஒரு தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இல்லை.

Bridge across Cooum near Poonamallee

* 271Q.—DR. H. V. HANDE: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government have any proposal to construct a bridge across the Cooum on the road leading to Tiruverkadu near Poonamallee;

(*b*) if so, the estimated cost of the bridge; and

(*c*) the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ), (இ) & (உ): மேற்கு பெருவழி தேசிய நெடுஞ்சாலையில் மைல் 10/4-ல் திருவேற்காடு அருகில் தேவி கருமாரி அம்மன் கோவிலுக்கு பிரியும் சாலையில் கூவம் ஆற்றின் குறுக்கே எழு இலட்ச ரூபாய் மதிப்பளவில் ஒரு மூழ்குப் பாலம் கட்ட அரசு பிப்ரவரி 71-ல் ஒப்புதல் அளித்துள்ளது. இவ்வேலையை செய்ய ஒப்பந்தம் முடிவு ஆகிவிட்டது. வேலை விரைவில் எடுத்துக்கொள்ளப்படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS